**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.353/2015**

**நாள்.24.08.2026**

**வா.சா. 2 - திருமதி.பாரதி கலைச்செல்வி**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். 2ம் வாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். 2ம் வாதிக்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் வாதிக்காக சாட்சியம் சொல்ல நான் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளேன் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எனக்கு தெரிந்த சங்கதிகளை மட்டுமே இ ந்த வழக்கில் சாட்சியம் சொல்ல முடியும் என்றால் சரியல்ல. வழக்கு 2 ம் தபசில் சொத்து ஆதியில் வேலாயுதம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல வேலு என்பவருக்கு பாத்தியப்பட்டது. நான் சொல்லக்கூடிய வேலு என்பவருக்கு 3 பெண் மக்கள் என்றால் சரிதான். அதில் ஒருவர் பெயர் பாலி என்றால் சரிதான். மேற்படி பாலி மகள் தான் 1ம் பிரதிவாதி பாலம்மாள் என்றால் அது பற்றி தெரியாது. நான் 1ம் பிரதிவாதி பாலம்மாள் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது தந்தை வழக்கு போடும்போது 1ம் பிரதிவாதி பாலம்மாள் தாயார் பெயர் என்ன என்பதை கேட்டுத் தெரிந்துகொண்டாரா என்றால் தெரியாது. நான் சாட்சி சொல்லவரும்போது 1ம் பிரதிவாதி பாலம்மாள் தாயார் பெயர் என்ன என்பதை கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நானும் 1ம் பிரதிவாதி பாலம்மாள் உறவினர் என்றால் என் அப்பா சொல்லிதான் உறவினர் என எனக்கு தெரியவந்தது. என் தந்தைக்கு தான் இந்த வழக்கு பற்றிய விவரங்கள் மற்றும் எங்களுக்கும் 1ம்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.08.24 18:33:12 +0530

பிரதிவாதி பாலம்மாள் இடையிலேனா உறவு முறை பற்றி தெரியும் என்றால் சரிதான். எனது தந்தை வழக்கு 2வது தபசில் சொத்து பொந்தியம்மாள் என்பவருக்கு வாய்மொழியாக கிடைத்ததாக சொல்லியுள்ளார் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா? என்றால் நேரடியாக தெரியாது. யார் யாருக்கு இடையில் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தது என்பது பற்றி நேரடியாக தெரியுமா? என்றால் நேரடியாக தெரியாது. வேலுவின் மூன்று பெண் மக்களுக்கு யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா? என்றால் நேரடியாக தெரியாது. வழக்கு 2 வது தபசில் சொத்து குறித்து பொந்தியம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பொந்தியம்மாள் பெயரில் பத்திரம் பார்த்துள்ளேன். பொந்தியம்மாள் பெயரில் என்ன பத்திரம் பார்த்துள்ளேன் என்றால் என்ன பத்திரம் என தெரியாது. வழக்கு 2 வது தபசில் சொத்து காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா கடற்கரை பொந்தியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக எனது தந்தை கட்சி செய்கிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.13 என் தாத்தா கடற்கரை பெயரிலான கிரைய ஆவணத்தை 1ம் பிரதிவாதியின் தாயாரோ, அல்லது 1வது பிரதிவாதியோ கையொப்பம் போட்டுள்ளார்களா என்றால் கையெழுத்து எதுவும் போடவில்லை. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.13 பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே 02.02.1986 ல் 1ம் பிரதிவாதி பாலம்மாள் பங்கு உரிமை கேட்டு பொந்தியம்மாளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது 2015 க்கு பிறகு தான் அவர்களுக்குள் நடுவே உள்ள பிரச்சனை எங்களுக்கு தெரியவந்தது. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.13 பிறப்பிக்கப்படுவதற்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.24 18:33:19 +0530

முன்பாகவே 02.02.1986 ல் 1ம் பிரதிவாதி பாலம்மாள் பங்கு உரிமை கேட்டு பொந்தியம்மாளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் அது பற்றிய விவரம் தெரிந்தபிறகு தான் மோசடியாக வா.சா.ஆ.13 எனது தாத்தாவால் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 02.02.1986 ல் 1ம் பிரதிவாதி பாலம்மாள் பங்கு உரிமை கேட்டு பொந்தியம்மாளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் அதனடிப்படையில் இந்த நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி, பொந்தியம்மாள் மற்றும் தனது தாயாரின் சகோதரிகளுக்கு எதிராக அ.வ.எண்.87/1986 வழக்கினை தாக்கல்செய்திருந்தார் என்றால் தெரியாது. அ.வ.எண்.87/1986 வழக்கில் இந்த வழக்கின் தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உண்டு என 16.08.1986 ல் முதல்நிலை தீர்ப்பானது என்றால் 2016 ல் தான் எங்களுக்கு தெரியவந்தது அதற்கு முன்பாக எங்களுக்கு தெரியாது. அ.வ.எண்.87/1986 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் இந்த நீதிமன்றத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை கேட்டு இ.ம.எண்.1651/2007 தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி இ.ம.எண்.1651/2007 ஆனது 30.11.2009 ல் அனுமதிக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்கண்ட இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 2ம் தபசில் சொத்தில் வடகடைசி 3 1/4 செண்ட் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 1ம் பிரதிவாதியால் இந்த நீதிமன்றத்தில் நிறைவேற்றுதல் மனு எண்.27/2010 தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. அதனடிப்படையில் 2ம் தபசில் சொத்தில் வடகடைசி 3 1/4 செண்ட் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு 19.09.2011 மற்றும் 21.11.2011 ல் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சுவாதீனம் ஒப்படைக்கப்பட்ட விபரம் எனக்கும் எனது

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.08.24 18:33:27 +0530

தந்தை 2ம் வாதிக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல எனது பாட்டி 2015ல் இறந்தார் அதன்பிறகு தான் எங்களுக்கு பிரச்சனை பற்றி தெரியவந்ததது அதன்பிறகு புகார் கொடுத்தோம். எனது தாத்தா பெயரிலோ, பாட்டி பெயரிலோ, எனது தந்தை 2ம் வாதி பெயரிலோ, எனது பெயரிலோ 2ம் தபசில் சொத்திற்கு பட்டா இதுநாள் வரை கிடையாது என்றால் அது பற்றி எனது தந்தையிடம் தான் கேட்கவேண்டும் ஆவணங்களை பார்த்தால் தான் எனக்கு தெரியவரும். நான் எனது தந்தை 2ம் வாதி சென்னையில் எவ்வளவு வருடமாக குடியிருக்கிறோம் என்றால் நான் பிறந்ததிலிருந்து சென்னையில் தான் இருக்கிறோம் வருடா வருடம் ஊருக்கு வந்து செல்வோம். எனது தாத்தா எனது பாட்டிக்கு வாய்மொழியாக எந்த ஆண்டு, மாதம் , தேதி வாய்மொழியாக நன்கொடை கொடுத்தார் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எனது தாத்தா எனது பாட்டிக்கு வாய்மொழியாக நன்கொடை கொடுத்தார் என நான் சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.13 பிறப்பிக்க எனது பாட்டிக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.13 மூலமாக எனது தந்தைக்கு வழக்கு 2ம் தபசில் சொத்து எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு 1ம் பிரதிவாதி வழக்கு 2ம் தபசில் சொத்தினை இந்நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற்று உரிமை அடைந்த சொத்துக்களை பொறுத்து தனது கணவரான 2ம் பிரதிவாதிக்கு ஏற்பாடு ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் அது பற்றி கேள்வி கேட்க எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு சரியான மறுபயன் பெற்றுக்கொண்டு வழக்கு 2ம் தபசில் சொத்தினை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.24 18:33:35 +0530

கிரையம் கொடுத்துவிட்டார் அது பற்றி கேள்வி கேட்க எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வழக்கு 2ம் தபசில் சொத்தினை கிரையம் பெற்றதிலிருந்து தனது அனுபவத்தில் வைத்து அனுபவித்துவருகிறார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.87/1986 வழக்கின் வழக்குமூலம் தேதிக்கு பிறகு எனது தாத்தா கிரையம் பெறப்பட்ட வா.சா.ஆ.13 1ம் பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது தாத்தா கிரையம் பெறப்பட்ட வா.சா.ஆ.13 அ.வ.எண்.87/1986 வழக்கின் நிலுவையின்போது பெறப்பட்ட ஆவணமாக கருதப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1வது வாதி சகாயராஜ் மற்றும் 2ம் வாதிக்கு தனித்தனி பிரச்சனை, தனி தனி வழக்கு மூலம் உண்டு என்றால் சரிதான். 1வது வாதி சகாயராஜ் மற்றும் 2ம் வாதி சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது தந்தை 2ம் வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.24 18:33:46 +0530